சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம்– திரு ஆர்.லஷ்மண், த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு ஆர்.ராஜேந்திர சிங் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண். 78

நாள் : 24.10.2020
சார்வரி, ஐப்பசி 08.
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த்துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ.1த்துறை, நாள் 23.01.2020.
3. தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத்துறை, சென்னை, அவர்களின் கடிதம் எண். எஸ் 1(2)/0649/2020, நாள் 28.02.2020 மற்றும் 18.09.2020.

-----

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, இயக்கம் மற்றும் பராமரிப்பு, சேப்பாக்கம், சென்னை அமைப்பின் கீழ் செயல்படும் பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலைக் கோட்டம், சென்னை அலுவலகத்தில் பணி ஆய்வாளர் (தரம்–2) ஆகப் பணியாற்றி வந்த திரு ஆர்.ராஜேந்திர சிங் என்பவர் கடந்த 19.05.2012 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர்/ மகன் திரு ஆர்.லஷ்மண் தனக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி 09.05.2013 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டதின் பேரில், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக திரு ஆர்.லஷ்மண் என்பவருக்குப் பணி நியமனம் அளிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத்துறை, சென்னை அலுவலகத்தில் 01.03.2019 முற்பகல் முதல் பணியில் பணியாற்றி வருகிறார் என்றும், தனியரின் பிறந்த நாள் 23.12.1985 என்றும், மத்திய அரசு பாடத்திட்டத்தில் (சி.பி.எஸ்.இ). 10–ஆம் வகுப்பினை 28.05.2001 அன்று முடித்துள்ளார் எனத் தெரிவித்து, தனியரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 01.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத் துறை, சென்னை, கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

4. தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், இளநிலை உதவியாளராகப் பணியாற்றி வரும் திரு ஆர்.லஷ்மண், என்பவர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும், பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், பணியமர்த்தப்பட்ட நாளான 01.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் உரிய / ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அ.சா.எண் 15425/ ட்டி.1 /2020, நாள்17.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா. எண் 26815/ஜி1 /2020–1, நாள்21.10.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத்துறை, சென்னை–5.

திரு ஆர்.லஷ்மண், இளநிலை உதவியாளர் (தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத்துறை, சென்னை –5 வழியாக)

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை–5.

மாநில கணக்காயர், சென்னை –18.

<u>நகல்:</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை/ பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, சென்னை– 9.

இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

28.10.20